# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஆகஸ்ட் 20, 2022

Weekly E-paper ● August 20, 2022




## ஆதிக்கத்தை அன்றே எதிர்த்த ஒண்டிவீரன்

சுப.வீரபாண்டியன்

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு

இராம.வைரமுத்து

## பதினொரு குற்றவாளிகள் "நல்லவர்"

தலையங்கம்

## சாவர்க்கர் தியாகியா? இல்லையா!

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஆகஸ்ட் 20, 2022 Weekly E-paper ● August 20, 2022


# ஆதிக்கத்தை அன்றே எதிர்த்த ஒண்டிவீரன்

சுப.வீரபாண்டியன்

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் நடைபெற்ற சிப்பாய்களின் புரட்சியை, இந்தியாவின் முதல் சுதந்திரப்போர் என்று இன்றும் பாட நூல்கள் நமக்குச் சொல்லிக் கொடுக்கின்றன. ஆனால் அதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களை எதிர்த்து, அவர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, அந்த ஆதிக்கப் பண்பாட்டை எதிர்த்துப் போர்முரசம் கேட்டது என்னும் உண்மை வரலாறு, பல நூல்களில் இப்போதும் மறைக்கப்படுகிறது.

1755ஆம் ஆண்டு தொடங்கி ஆங்கிலேயர்களின் வரி வசூலை, ஆதிக்கத்தை எதிர்த்த ஒரு தமிழ் மன்னன்தான் பூலித்தேவன். நெற்கட்டும் செவல் என்னும் பகுதியை ஆண்டு வந்த அந்தப் பூலித்தேவனின் ஈடு இணையற்ற படைத்தளபதி ஒண்டிவீரன். இருவரின் எதிர்ப்பையும் எதிர்கொள்ள முடியாமல் ஒரு முறை ஆங்கிலேயப் படை மதுரை மாநகருக்குத் திரும்பி வந்துவிட்டது.





பிறகு பீரங்கிகளோடு அவர்கள் வந்திருக்கின்றனர் என்பதை அறிந்து கொண்ட பூலித்தேவன், அதனைச் சமாளிக்கத் தன் தளபதி ஒண்டிவீரனை தனியாகவே அனுப்பி வைத்தார். அங்கு சென்று ஒண்டிவீரன் ஆளில்லாத நேரத்தில் பீரங்கிகளை அவர்களின் கோட்டைகளை நோக்கித் திருப்பி வைத்தார். பீரங்கிகள் வெடித்த போது ஆங்கிலேயர்களின் அரண்கள் சரிந்து வீழ்ந்தன. தனி ஒரு மனிதனாக எதிரியின் குகைக்குள் சென்று வெற்றியை ஈட்டி வந்ததால் அந்த மாவீரன் ஒண்டிவீரன் என்று அழைக்கப்பட்டார்.

1767ஆம் ஆண்டு பூலித்தேவன் மறைந்த பிறகும், சில ஆண்டுகள் தங்கள் படையைப் போற்றிப் பாதுகாத்து நாட்டையும் காத்தவன் ஒண்டிவீரன். அவ்வீரனின் நினைவு நாள் ஆகஸ்ட் 20 என்று இணையதளங்களில் காணப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் மட்டும்தான் அந்நியர்கள் என்று இல்லை யாரெல்லாம் தங்கள் ஆதிக்கத்தை, தங்கள் பண்பாட்டை நம் மீது திணிக்க முயற்சி செய்கிறார்களோ அவர்கள் அத்தனை பேரும் அந்நியர்கள்தான். அந்நியப் பண்பாட்டுக்கு ஒரு நாளும் நாம் தலை வணங்க முடியாது.

எல்லோரும் ஒன்றாக இருப்பது நல்லது. ஆனால் அதற்கு அவரவர் அடையாளத்தை விலையாகக் கொடுக்க வேண்டும் என்பதில்லை. பன்மைத்துவம்தான் ஜனநாயகத்தின் அடிக்கட்டுமானம் என்று சொல்லலாம். ஆங்கிலேயர்கள் அதனை மறுத்து தங்கள் பண்பாட்டை, தங்கள் மொழியை, தங்கள் பொருளாதாரத்தை



இங்கு கொண்டு வந்து திணித்தார்கள். இப்போது நாட்டில் மீண்டும் அதே முயற்சி தொடங்குகிறது.

நாம் ஒண்டிவீரனின் பரம்பரைகள். ஒரு நாளும் ஆதிக்கத்திற்கு அடிபணிய மாட்டோம்.

ஒரே மாலையில் கலந்து கிடக்கும் பூக்களாய் என்றும் இணங்கி இருப்போம். ஆனால் புலியும் மானுமாய் ஒரு நாளும் நாம் பலியாக மாட்டோம்.

நம் மீது ஆதிக்கம் செலுத்த வருகிற பார்ப்பனியப் பண்பாட்டை, சமஸ்கிருத மொழியை, வட ஆரிய வல்லமையை ஒரே அணியில் நின்று ஒண்டிவீரனைப் போல் எதிர்க்க வேண்டிய தேவையை மறுபடியும் காலம் நம் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது. சமூக நீதியை, ஜனநாயகத்தை, மத நல்லிணக்கத்தை, பெண் விடுதலையைப் பேணிக் காக்க அனைவரும் ஓர் அணியில் இருப்போம். எதிரிகளை ஒண்டி வீரனைப் போல் நின்று, என்றும் எதிர்ப்போம்! •

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு

## நீதிபதி அருணாஜெகதீசன் விசாரணைஅறிக்கை

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை போரட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ள ஒய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அப்போதைய அ.இ.அ.தி.மு.க அரசு அமைத்தது. 04.06.2018 அருணா ஜெகதீசன் ஆணையம் தனது விசாரணையைத் தொடங்கியது. ஆணையத்தின் இடைக்கால அறிக்கை 14.05.2021அன்றும், முழு அறிக்கை 18.05.2022 அன்றும் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தாக்கல் செய்யப்பட்டது.



முழு விசாரணை அறிக்கையை தாக்கல் செய்த பின் சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள விசாரணை அலுவலகத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் செய்தியாளர்களைச் சந்தித்து பின்வருமாறு கூறினார்: தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்தைப் பொறுத்தவரை விசாரணை வெளிப்படையாகவும், அதே நேரத்தில் ரகசியத் தன்மை கொண்டதாகவும் இருந்தது. இதன் காரணமாக ஏராளமானோர் பாதிக்கப்பட்ட நபர்கள் தாமாக முன்வந்து வாக்குமூலம் அளித்ததனர்.துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக 5 பாகங்கள் கொண்ட அறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அளித்துள்ளேன். இந்த அறிக்கை மொத்தம் 3000 பக்கங்கள் கொண்டதாக உள்ளது. இந்த அறிக்கையின் முதல் இரண்டு பாகங்களில் சம்பவம் தொடர்பானவை இடம்பெற்றுள்ளன. மூன்றாவது பாகத்தில் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. நான்காம் பாகத்தில், வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு என்ன மாதிரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்தும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஐந்தாம் பாகத்தில் 1500 வீடியோ ஆவணங்கள் மற்றும் 1250 சாட்சிகள், 1500 காவல்துறையினரிடம் விசாரணை நடத்தப்பட்டது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளோம். நடிகர் ரஜினிகாந்த் இந்தச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்தார். அவரிடம் இந்தச் சம்பவம் குறித்து விளக்கம் கேட்டபோது தனக்கு இந்த விவகாரத்தைப் பொறுத்தவரை எதுவும் தெரியாது எனவும், தொலைக்காட்சியைப் பார்க்கவில்லை எனவும், உணர்ச்சிவசப்பட்டு சில கருத்துகளைத் தெரிவித்து விட்டதாகவும் அவர் விளக்கம் அளித்துள்ளார்.

மேலும் நீதிபதி அருணா ஜெகதீசன், பேரணி போன்றவற்றில் ஈடுபடும் போது பொதுமக்கள் என்ன மாதிரியான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளதாகக் கூறினார். இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள அம்சங்கள் தற்போது வெளியாகி உள்ளது. அதன் விவரம் பின் வருமாறு

“தடியடி, கண்ணீர் புகைவீச்சு, வானத்தை நோக்கிச் சுடுதல் போன்ற எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் காவல்துறையினர் மேற்கொள்ளவில்லை. போராட்டக்காரர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் கூட படுகாயம் அடையவில்லை. போராட்டம் தொடர்பான உளவுத்துறை தகவல் முன்கூட்டியே கிடைத்தும் அதற்குத் தகுதியான முக்கியத்துவம் கொடுத்து அப்போதைய தென் மண்டல காவல்துறைத் தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட தகவலே காவல்துறை உயர் அதிகாரிகளுக்குத் தெரியாமல் வைக்கப்பட்டிருந்து, உரிய உத்தரவுகள் இன்றியே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடு சம்பவம் கொடூரமான செயல். காவல்துறையினர் வரம்புகளை மீறி செயல்பட்டுள்ளனர். இது காவல்துறை தலைமையின் அப்பட்டமான தோல்வி. காவல் துறையினர் பூங்காவிற்குள் மறைந்து இருந்து துப்பாக்கியால் சுட்டனர். குண்டு வருவது தெரியாமல் போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர். கலைந்து ஓடியவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளை ஆய்வு செய்ததில், அவை தொலைவில் இருந்து துல்லியமாக சுடக்கூடிய Long Range துப்பாக்கிகள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கையின் படி, குண்டுகள் பின் தலை வழியே ஊடுருவி நெற்றி வழியாக வெளியே வந்ததன் மூலம் பின்னால் இருந்து சுட்டது தெரிய வந்துள்ளது. சுட்டுக் கொல்லப்பட்ட 13 பேரில் 6 பேர் பின் தலையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். காவலர் சுடலைக்கண்ணு என்பவர் மட்டும் 17 ரவுண்ட் சுட்டுள்ளார். அவரைத் தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகம், 3ம் மைல், எஃப்சிஐ ரவுண்டானா, திரேஸ்புறம் போன்ற நான்கு இடங்களில் இருந்து சுட வைத்துள்ளதன் மூலம் அவரை அடியாள் போல காவல்துறை பயன்படுத்தியது தெரியவந்துள்ளது. எஃப்சிஐ ரவுண்டானா அருகே சுடலைக்கண்ணு சுட்டபோது எஸ்.பி. மகேந்திரன், எஸ்.பி. அருண்சக்தி குமார் உடனிருந்தனர்.

இப்போராட்டத்தை மாவட்ட ஆட்சியர் மிக அலட்சியமாக அணுகி உள்ளார். அன்றைய தினம் பொறுப்புகளைத் தட்டிக் கழித்து விட்டு கோவில்பட்டியில் இருந்துள்ளார் மாவட்ட ஆட்சியர். அவர் எவ்வித யோசனையும் இல்லாமல் முடிவுகளை எடுத்துள்ளார். வீட்டில் இருந்து கொண்டே அமைதிப் பேச்சுவார்த்தைக் கூட்டத்திற்குச் செல்லாமல் உதவி ஆட்சியரை அனுப்பியுள்ளார். தென் மண்டல காவல் துறைத் தலைவர் சைலேஷ் குமார், நெல்லை சரக காவல் துறைத் துணைத் தலைவர் கபில் குமார் சர்கார், தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மகேந்திரன், காவல் துணைக் கண்காணிப்பாளர் லிங்க திருமாறன், 3 ஆய்வாளர்கள், 2 சார்பு ஆய்வாளர்கள், 1 தலைமைக் காவலர், 7 காவலர்கள் உள்ளிட்ட காவல்துறையினர் 17 பேர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும், போராட்டத்தைக் கட்டுப்படுத்தத் தவறியத் தூத்துக்குடி மாவட்டத்தின் அப்போதைய ஆட்சியர் வெங்கடேஷ் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட அம்சங்கள் மூலம் அன்றைய அ.இ.அ.தி.மு.க அரசும், தூத்துக்குடி மாவட்ட நிர்வாகமும், காவல்துறையினரும் ஸ்டெர்லைட் நிறுவனத்தின் ஏவலர்களாக நடந்து கொண்டிருப்பது தெள்ளத் தெளிவாகப் புலனாகிறது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறையினர் 17 பேர் மட்டுமின்றி “துப்பாக்கிச் சூட்டைத் தொலைக்காட்சியில் பார்த்துத் தெரிந்து கொண்டேன்” என்று பொறுப்பற்ற முறையில் பதிலளித்த அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டுச் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவதும், ஸ்டெர்லைட் ஆலை நிரந்தரமாக மூடப்படுவதும்தான் போராடிய மக்களின் உயர்ந்த நோக்கத்திற்கான உண்மையான வெற்றியாக அமையும்.

நீதி வெல்லும் ! நிச்சயம் வெல்லும் !! •

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பதினொரு குற்றவாளிகள் "நல்லவர்"

அயோத்தியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த சபர்மதி விரைவு இரயில் குஜராத் மாநிலம், கோத்ராவில் 27-02-2002 அன்று தீயிட்டு எரிக்கப்பட்டது வன்முறைக் கும்பலால்.

இதில் 14 குழந்தைகள் உள்பட, 57 பேர் கொல்லப்பட்டனர். பில்கிஸ் என்ற கர்ப்பிணிப் பெண்ணை 11 பேர் பாலியல் வன்கொடுமைச் செய்ததோடு, அப்பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரைக் கொலை செய்தனர்.

இந்தப் பெரும் கொடுமை வழக்கு 15 ஆண்டு காலம் நடைபெற்றுக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். அவர்களில் இந்த 11 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தக் குற்றவாளிகளின் தண்டனைக் குறைப்புக் குறித்துப் 'பரிசீலிக்குமாறு' குஜராத் அரசுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது. இதைச் சாக்காக வைத்துக் கொண்டு குஜராத் மாநில அரசு, தண்டனைக் குறைப்பே இல்லாமல், மிகச் சாதாரணமாக 11 குற்றவாளிகளையும் விடுதலை செய்து உத்தரவிட்டு, அவர்களும் வெளியே வந்து விட்டனர்.

இதுகுறித்து அம்மாநில பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் சி.கே.ராவ்ஜி சொல்கிறார் அந்த 11 பேரும் பிராமணர்களாம். நல்ல பழக்க வழக்கம் கொண்டுள்ள அவர்கள் பிராமணத் தூய்மை உடையவர்களாம். சிலரின் தூண்டுதலின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டார்களாம்.

இப்படிச் சொல்பவர் ஆளும் பா.ஜ.கவின் சட்டமன்ற உறுப்பினர் என்பதை மீண்டும் நினைவு படுத்துவது அவசியம் ஆகிறது. ஏனென்றால் சில நாட்களுக்கு முன்னர் 75ஆம் சுதந்திர நாளில் பா.ஜ.க தலைவருள் ஒருவரான பிரதமர் மோடி டில்லியில், பெண்களின் பாதுகாப்பு, முன்னேற்றம் என்றெல்லாம் பேசி புளங்காகிதம் ஆனார்.

அவர் பேசி முடித்ததும் அவரின் சொந்த மாநிலமான குஜராத்தின் பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினரின் குரல் பெண்களுக்கு எதிராக வன்முறையாளர்களுக்கு ஆதரவாக அல்லவா இருக்கிறது.

பா.ஜ.கவின் இரட்டை வேடமும், 11 குற்றவாளிகளின் விடுதலையும் கடும் கண்டனத்திற்கு உரியது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை


இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408






இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பாக 20-08-2022 அன்று நடக்கவிருக்கும் மூன்று நூல்கள் அறிமுகக் கருத்தங்கம் அழைப்பிழை, தாம்பரம் மாநகராட்சி மேயரிடம் படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர் மதிவாணன் வழங்கினார். உடன் பேரவை மாவட்டச் செயலாளர் இளமாறன், தோழர்கள் அன்பு, தாம்பரம் அசாருதீன் ஆகியோர்.



# வீசிய செருப்பும் சின்ரல்லா கதையும்!

தம்பி பிரபு

யார் மீதாவது கால் பட்டால் "ஏம்பா! செருப்பு காலை வச்சு மிதிக்கிற" என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். வெறுங்கால் படுவதை ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும் செருப்புக் கால் மிகுந்த அவமானம். அதாவது கத்தியால் குத்துவதைக் காட்டிலும் செருப்பால் அடிப்பது என்பது இந்தியச் சமூகத்தில் பெருத்த அவமானம்.

தமிழ்நாட்டில் இந்த மனோபாவம் நிறைய மாற்றம் பெற்றிருந்தாலும் கூட சாதிய, மத வெறி ஊறிய மனிதர்கள் கையில் செருப்பு ஒரு இழிவு செய்யும் ஆயுதமாகவே இன்றும் உள்ளது. இப்போது தமிழக நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் அவர்களின் வாகனம் மீது வீசப்பட்ட செருப்பு ஒன்று முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

தங்களின் கொள்கைக்கு மாறான மனிதர்கள் மீதான வெறுப்பை எந்த வகையிலாவது காட்டி அதன் மூலம் அரசியல் லாபம் பார்க்கும் பாஜக வீசிய செருப்புதான் அது. பாஜக தொடர்ந்து நம் மக்களிடம் செல்வாக்கு இழந்து வருவதைக் காண்கிறோம். NOTAவோடு போட்டி போட்டுக்கொண்டு மக்களுக்கு அந்நியமான செயல்களை மட்டுமே எப்போதும் செய்து வரும் பாஜக எப்படியாவது, எதைச் செய்தாவது மக்களின் மனதில் இடம்பிடித்து விட நினைக்கிறது. அதிலும் அண்ணாமலை போன்ற அறிவுஜீவிகள் செய்யும் காரியம் எல்லாம் விளம்பரத்தனமாக வெகுஜன மக்களுக்கு வேகமாக சென்று சேர்ந்தாலும்



இறுதியில் நகைப்பில்தான் முடிகிறது. நகைப்புக்குரியவர்கள் நிராகரிக்கப்பட்டால் மனநிலை பாதித்து என்ன செய்வார்களோ அதைச் செய்கிறார்கள். அதை ஆதிகாலத்தில் இருந்தே செய்கிறார்கள். இப்போதும் செய்துள்ளார்கள். மாறவே இல்லை.

அதேசமயம் இந்தச் செருப்பு வீச்சுக் குறித்து 'சின்ரல்லா' கதையைச் சொல்லி அவர்களை நிலைகுலையச் செய்துள்ளார் பிடிஆர். அவர் பார்த்து, படித்து அறியாத வரலாற்று செருப்புகள் உண்டா என்ன? திராவிட இயக்க முன்னோடி வீட்டுப் பிள்ளையாயிற்றே? அது அவருக்கு தெரியாதா என்ன? இந்த இடத்தில் 2 பழைய செருப்புகளைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். அந்த 2 செருப்புகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக நாம் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஒன்று கடலூரில் தந்தை பெரியார் மீது 29.07.1944ல் வீசப்பட்ட செருப்பு. இன்னொன்று 24.1.1971ல் சேலத்தில் நடந்த மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டுப் பேரணியில் பெரியார் மீது வீசப்பட்ட செருப்பு.

முந்தைய 2 செருப்புக்குகளுக்கு மட்டுமல்ல இப்போது விழுந்த ஒற்றைச் செருப்புக்கும் ஒரு ஒற்றுமை உண்டு.

முதல் செருப்பின் வெற்றி 28 வருடம் கழித்துச் சிலையாக நின்றது. இரண்டாவது செருப்பின் வெற்றி இந்தியாவிலேயே அதிக இடத்தில் வென்ற கட்சி என்ற சாதனையை அப்போது திமுக தேர்தலில் பெற்றது. இப்போது மூன்றாவதாக பிடிஆர் மீது வீசப்பட்ட செருப்பு இன்னும் சிறப்பாக, வீசப்பட்ட அதே நாளிலேயே மன்னிப்புக் கேட்டுள்ளது.

பிடிஆர் போன்ற நம் கொள்கை வழிவந்தவர்கள் செருப்பிலாத கால்களுக்குச் செருப்பை அணிவிக்கும் பணியைச் செய்கிறார்கள்.

நிதியமைச்சரின் கையெழுத்து செருப்பை எரிந்த அந்தப் பெண்ணின் கால்களுக்கும் சேர்த்துத்தான் போடப்படுகிறது. நடந்து தேய விடாமல் அப்பெண்ணை இலவசமாய்ப் பேருந்தில் ஏற்றுகிறது.

திராவிட இயக்கப் பதிலடி அதுதான். இன்னா செய்தாரை அவ்வாறு ஒறுப்போம். ●

# சாவர்க்கர் தியாகியா? இல்லையா!

மதிவாணன்

75-ஆம் விடுதலை நாள் விழா நாடெங்கும் கொண்டாடப்பட்ட போது சாவர்க்கரின் படம் விடுதலைப் போராட்ட வீரர்கள் நடுவே காணப்பட்டது மக்கள் இடையே பெரும் நகைப்பை ஏற்படுத்தி உள்ளது. சாவர்கருக்கும் விடுதலைக்கும் என்ன தொடர்பு என்று பலரும் கூகுள் பொறியில் தேடத்தொடங்கிவிட்டனர். ஆனால் இருந்தால்தானே கிடைப்பதற்கு?

சாவர்க்கரைப் பொறுத்தமட்டில், விடுதலைப் போராட்டம் என்பது, அவர் சிறையில் இருந்த போது தன் சொந்த விடுதலைக்காக ஆங்கிலேய அரசிடம் தொடர்ந்து ஆறு மன்னிப்புக் கடிதங்களை எழுதிக் கொடுத்தது. தன் பணிவான விசுவாசத்தைக் காட்ட வாய்ப்பு வழங்கக் கோரியும், மன்னிக்காவிட்டால் ஆங்கில இராணுவ அதிகாரிகளின் கால்களை விடமாட்டேன் என்ற அளவிற்குப் பணிந்து குனிந்து, இறுதியில் தண்டனைக்காலம் முடியும் முன்பே சிறையை விட்டுப் பறந்தோடியவர் அவர். மேலும், ஆங்கிலேய அரசிடம் மாதம் ரூ.60 ஓய்வூதியமாகப் பெற்றார். இதுதான் சாவர்க்கரின் 'தியாகம்'.

1910ஆம் ஆண்டிற்குப் பிறகு சாவர்க்கர், அரசியல் என்பது மதஅடிப்படையில் தான் என்று மக்களைப் பிரிக்கும் அரசியலுக்கு வழிவகுத்தார், மாறாக விடுதலை அரசியலுக்கும், அவருக்கும் எந்தத் தொடர்புமில்லை. இந்த நாட்டில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து போகும் அளவுக்கு இஸ்லாமியர்களைத் தள்ளியதில், சாவர்க்கர் வகையறாக்களுக்கு முக்கியப் பங்கு இருந்தது.



இரண்டாம் உலகப் போரின் போது ஆங்கிலேயப் படைகள் உலகின் பல்வேறு இடங்களில் சிதறி இருந்த காலம். இந்தியாவில் ஆங்கிலப் படை சற்றுக் குறைவாக இருந்தது. இந்நிலையில் நேதாஜி அவர்கள் சிங்கப்பூர், மலேசியாவில் வீரர்களைத் திரட்டி, ஜப்பானின் ஆதரவுடன் இராஷ் விகாரி போஸ் உருவாக்கிய இராணுவத்திற்குத் தலைமையேற்று ஆங்கிலேயப் படையை எதிர்த்துப் போராடி சிரப்புஞ்சி வரை முன்னேறி வந்தார். அப்போது சாவர்க்கர், கோல்வார்கர் போன்றோர் இந்திய இந்து இளைஞர்களை ஆங்கில அரசின் படையில் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டு இருந்தனர். அத்துடன் நிதி திரட்டியும் கொடுத்தனர். இறுதியில் நேதாஜியின் இந்தியப் படை தோல்வியைத் தழுவியது. இதுதான் சாவர்க்கரின் 'தியாகம்'!

காந்தியார் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தை அறிவித்த போது அதனைக் கண்டித்தும், அதில் இளைஞர்கள் இணைய வேண்டாம் என்றும் அறிக்கை வெளியிட்டவரும் இதே சாவர்க்கர்தான்.

விடுதலை இந்தியாவில் முதல் பயங்கரவாதம் காந்தியாரின் படுகொலை. பட்டேல் நேருவிற்கு எழுதிய கடிதத்தில், சாவர்க்கரின் கட்டுப்பட்டில் இருந்தவர்களே காந்தியாரைப் படுகொலை செய்துள்ளனர் (Sardar Patel's Correspondence, Volume 6, Page 56) என்றும், காந்தியாரைப் படுகொலை செய்த கோட்சே, ஆப்தே ஆகியோரை வெற்றியுடன் திரும்பி வாருங்கள் என்று வாழ்த்தி அனுப்பினார் சாவர்க்கர் (Sardar Patel's Correspondence, Volume 6, Page 323) என்றும், நீதிபதி ஜே.எல்.காபூல் கமிஷன் சாவர்க்கரின் பங்கை ஆதாரங்களுடன் விளக்குகிறது.

இப்பொழுது சொல்லுங்கள் சாவர்கர் தியாகியா? இல்லையா? ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian